கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 25/2023

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 01- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திலகவதி | வயது | 26 |
| கணவர் பெயர் | வினோத்குமார் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**கு.வி.மு.ச. பிரிவு 311-ன் கீழ் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலிசார் விசாரணையிலும் புகார் வாக்குமூலத்திலும் சம்பவத்தின் போது யார் யார் இருந்தார்கள் என்று நான் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரும் எதிரி ராஜ்குமாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதால் அவர்களுக்குள் நீண்ட நாட்களாக சொத்து பிரச்சனை இருந்து வந்துள்ளது என்றால் சரிதான். குடவசால் அரசு மருத்துவமனையில் நான் மருத்துவரிடம் என்ன கூறினேன் என்றால் என்னை வயிற்றில் எட்டி உதைத்ததாக கூறினேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்திருந்த போது போலிசார் எத்தனை மணிக்கு என்னை விசாரணை செய்தனர் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள்.

2) நான் இடைப்பட்ட காலத்தில் எழுத்துப்பூர்வமாக புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு வயிற்றில் உதைத்ததன் காரணமாக உதிர போக்கு ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அதனால் எனது ஆடைகளில் ரத்த கறைகள் இருந்ததா என்றால் இருந்தது. நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்த போது என்னை ஆண் காவலர் விசாரரணை செய்தாரா அல்லது பெண் காவலர் விசாரணை செய்தாரா என்றால் ஆண் காவலர் விசாரணை செய்தார். போலிசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எனக்கு உதிர போக்கு

ஏற்பட்டதுகுறித்து நான் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு வரை படித்துள்ளேன்.

3) போலிஸ் விசாரணையின் போது நான் எத்தனை மாதம் கர்பிணியாக இருந்தேன் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று காலை 6.00 மணிக்கு எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு எனக்கும் எனது கொழுந்தனாருக்கும் பிரச்சனை நடந்ததா என்றால் அன்றைய தினம் நடக்கவில்லை அதற்கு முந்தின நாள் தான் நடந்தது. அதற்கு முந்தின நாள் சண்டைநடந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4) சம்பவம் எனது வீட்டிற்கு வெளியே நடந்ததா அல்லது எதிரி ராஜ்குமார் வீட்டிற்கு வெளியே நடந்ததா என்றால் நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் தான் இருக்கிறோம், வீட்டின் உள்ளே தான் சம்பவம் நடந்தது. நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் வசிக்கும் விபரத்தை போலிசார் விசாரணையிலும் எனது புகார் வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தால் தான் சொத்தை பிரித்து வாங்கமுடியும் என்று எண்ணி அவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் கருவுற்று இருக்கவில்லை என்றும், என்னை வயிற்றில் உதைத்ததன் காரணமாக கரு கலையவில்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரி என்னை அசிங்கமான வார்த்தைகள் கூறி திட்டவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரி என்னை சுவற்றில் தள்ளி அடித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால்சரியல்ல. நான் 15 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். நான் 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றும் 2 நாட்களிலேயே சிகிச்சை முடிந்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பொய்யாக வழக்கிறக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.